**FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051837

1. District மாவட்டம் : Madurai PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 07/2021 Date: நாள் 30.04.2021

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 Sections பிரிவுகள்: 7 Of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention Of Corruption (Amendment) Act 2018 & 102 Cr.P.C.
(ii) Act சட்டம்: Cr.P.C. Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 02.11.2018 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 19.35hrs to 2300 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.11.2018 Time : நேரம் 2345 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.04.2021 Time : நேரம் 13.30 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Petition (written)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 1/2 km South East.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o City Engineer, madurai corporation, madurai.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Saravanan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. Sugumaran
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Inspection cell Officer (g) Address : முகவரி O/o District Inspection cell, madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) Tr. S. Arasu, S/o P.M. Selvaraj, Executive Engineer, Zone-I, City Engineer (i/c) (2) Tr. M.P. Manoharan, S/o M. Periyasamy, Assistant Executive Engineer, (3) Tr. Bala Gurunathan, Technical Assistant (4) Tr. R. Chandra mohan, S/o K. Rajarathinam Data Entry Operator, O/o City Engineer, madurai corporation, madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
To obtain a Prior Permission from the competent authority to register a case.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Three seperate sheets in Page NO's 3 to 8 were enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ T.S.Lurtyakala Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Kannan
INSP/VRAC

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 30/4/2021

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

30.04.2021 at 15.30 hrs.

Name: பெயர் A. KANNAN
Rank: நிலை Inspector No. எண் V.RAC madurai

பணிந்து சமர்ப்பிக்கிறேன்

மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அ. கண்ணன் ஆகிய நான் 02.11.2018-ம் தேதி இரவு 23.45 மணியளவில ,அலுவலில் இருந்த போது, 02.11.2018-ம் தேதி 19.35 மணி முதல் 23.00 வரை மதுரை மாநகராட்சி நகர் பொறியாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணை ஆய்வு சம்மந்தமாக மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு. S. சரவணன் அவர்கள் அவரது அலுவலக ந.க. எண்; **I1/80/2018** நாள் : 02.11.2018-ன் படி அளித்த புகார்மனுவையும், அத்துடன் இணைத்து கொடுக்கப்பட்ட வாக்குமூலங்கள், ஆவணங்கள், கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் வெள்ளிபொருட்கள் ஆகியவற்றை பெற்றேன்.

மேற்படி புகார்மனுவில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய முன் அனுமதி வேண்டி கொடுத்த வேண்டுதல் கடிதத்தின் பேரில், Govt. Letter (D) No. 141, Municipal Administration and Water Supply Department, Dated : 26.03.2021 –ன் படி குற்றவழக்கு பதிவு செய்ய அனுமதி வழங்கப்பட்டது. எனவே, இன்று 30.04.2021-ம் தேதி 13.30 மணிக்கு மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு. S. சரவணன் அவர்கள் அளித்த புகார் மனுவின் பேரில், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 07/2021 சட்டப்பிரிவுகள் 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 & 102 Cr.P.C.-ன் படி வழக்கு பதிவு செய்தேன். மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு. S. சரவணன் அவர்கள் அளித்த புகார் மனுவில் உள்ள விபரம் பின்வருமாறு : அனுப்புநர் திரு. S. சரவணன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மதுரை. பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. **ந.க. எண். I1 / 80 / 2018 நாள் : 02.11.2018** அய்யா, பொருள் : திடீர் இணை ஆய்வு - மதுரை மாநகராட்சி அலுவலக வளாகம் - நகர் பொறியாளர் அலுவலகத்தில் 02.11.2018-ம் தேதி 19.35 மணி முதல் 23.00 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - பணம் ரூ.2,51,500/- மற்றும் வெள்ளிப் பொருட்கள் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தொடர்பாக. பார்வை : மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் செயல்முறை நடவடிக்கைகள் நாள் : 02.11.2018 -- இன்று 02.11.2018-ம் தேதி இரவு, மதுரை மாநகராட்சி அலுவலக

வளாகம் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ள நகர் பொறியாளர் அலுவலகத்தில், இன்று நடைபெற்ற டெண்டரில் கலந்து கொண்ட ஒப்பந்தகாரர்களிடம் லஞ்சம் பெறுவதாகவும், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஒப்பந்தகாரர்களிடம் அன்பளிப்புகள் பெறுவதாகவும் கிடைத்த நம்பகமான தகவலின் பேரில், இன்று இரவு 19.35 மணிக்கு, நானும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர்கள் மற்றும் பார்ட்டி சகிதம் மதுரை - திருச்சி ரோட்டின் தெற்கே உள்ள மதுரை மாநகராட்சி அலுவலக வளாகத்தில் இரண்டாவது தளத்தின் தெற்கு கடைசியில் உள்ள நகர் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வின் போது, மேற்படி அலுவலகத்தில் நகர் பொறியாளர் திரு.அரசு அவரது அலுவலக இருக்கையில் அமர்ந்து மாநகராட்சி அலுவலர்கள் திரு.ராமசாமி, திரு.செந்தில்குமார், திரு.பாலகுருநாதன் மற்றும் ஒப்பந்தகாரர் திரு.ராஜாராம் ஆகியோருடன் பேசிக்கொண்டிருந்தார். அலுவலக உதவியாளர் திரு.முருகானந்தம் உள்ளே இருந்தார். நகர் பொறியாளர் திரு.அரசுவிடம், என்னையும், என்னுடன் வந்த ஊழல் தடுப்பு பிரிவு அலுவலர்களையும், அறிமுகம் செய்து கொண்டு மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்வதற்கு வந்துள்ளதாக தெரிவித்தேன். தொடர்ந்து நகர் பொறியாளர் அறையைச் சோதனையிட்ட போது, அவரது இருக்கைக்கு இடதுபுறம் இருந்த சிறிய மேசையிலிருந்த வெள்ளை நிற சிறிய சணல் பையில் ரூ.1,34,500/- இருந்தது மற்றும் அவரது அறையின் வடகிழக்கு மூலையில் உள்ள கதவருகிலிருந்த கப்போர்டில், 2018-ம் ஆண்டு ஜனவரி மாதத்துக்கான பல வண்ண காலண்டர் பேப்பர் கவரில் ரூ.73,000/-மும் இருந்தது. மேற்படி பணம் குறித்து விபரம் கேட்க அந்தப் பணம் தனது அறைக்குள் எப்படி வந்தது எனத் தெரியவில்லை என்று நகர் பொறியாளர் திரு.அரசு தெரிவித்தார். மேலும், மேற்படி அறையில் திரு.அரசு அமர்ந்திருந்த இருக்கைக்கு எதிரிலிருந்த மேசையின் வலதுபுறம் கீழே உள்ள டிராயரில் சிறிய சிவப்பு நிறப் பெட்டியில் கஜலட்சுமி கடவுள் அச்சிடப்பட்டிருந்த சில்வர் காசு ஒன்று இருந்தது. அந்த சில்வர் காசு தனது மேஜை டிராயருக்கு எப்படி வந்தது எனத் தனக்குத் தெரியவில்லை என்று கூறினார். அவர் அளித்த விளக்கம் ஏற்கக்கூடியதாக இல்லை. எனவே, மேற்படி பணம் ரூ.2,07,500/- மற்றும் சில்வர் காசு ஆகியவை கணக்கில் வராத அனாமதேய சொத்து என்பதால் அவை நகர் பொறியாளர் அறையிலிருந்து கைப்பற்றப்பட்டது. மேலும், திரு.அரசு அவர்கள் தனது பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ததை எண்ணிப் பார்த்த

போது அதில் ரூ.12,700/- இருந்தது. அந்தப் பணம் குறித்து திரு.அரசுவிடம் கேட்ட போது அது தனது சொந்தப்பணம் என்று சொன்னதன் பேரில் அந்தப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அந்த அறையில் திரு.அரசுவிடம் பேசிக்கொண்டிருந்த மேலே குறிப்பிட்ட மூன்று மாநகராட்சி அலுவலர்கள், ஒப்பந்தகாரர் ராஜாராம், அலுவலக உதவியாளர் முருகானந்தம் ஆகியோரிடம் சோதனையிட்ட போது திரு.ராமசாமியிடம் ரூ.25,110/-ம், திரு.செந்தில்குமாரிடம் ரூ.8,500/-ம், திரு.முருகானந்தம் என்பவரிடம் ரூ.2,800/-ம், திரு.பாலகுருநாதனிடம் ரூ.8,680/-ம், திரு.ராஜாராமிடம் ரூ.900/- மட்டும் இருந்தது. மேற்படி பணம் குறித்து அவர்களிடம் விசாரித்த போது அவை தங்களது சொந்தப் பணம் என்று சொல்லிய விளக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்ததன் பேரில் அந்தப் பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நகர் பொறியாளரின் தனி அலுவலர் திரு.மனோகரன் என்பவர் அமர்ந்திருந்த அறையில் சோதனையிடப்பட்டது. மேலும், திரு.மனோகரன் தனது பர்சில் வைத்திருந்த ரூ.500/- சொந்தப் பணம் என்றதால் அந்தப் பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவரது இருக்கைக்கு இடதுபுறமிருந்த இரும்பு அலமாரியின் கீழடுக்கில் வெள்ளை நிறக் கவரில் CE (PA) என ஊதாநிற மையினால் எழுதப்பட்டிருந்த கவரில் இருந்த ரூ.5,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதில் பத்து 500/- ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. மேற்படி பணம் குறித்து கேட்ட போது, வாட்டர் சப்ளை காண்ட்ராக்டர் திரு.தங்கராஜ் என்பவர் தீபாவளி அன்பளிப்பாக சற்று முன்னர் இரவு சுமார் 7 மணியளவில் தனக்குக் கொடுத்ததாகக் கூறினார். மேலும், அதே இரும்பு அலமாரியின் கீழ் அடுக்கில் இருந்து ரூ.24,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப் பார்த்த போது அதில் 10 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளும், 8 ஐநூறு ரூபாய் நோட்டுகளும் இருந்தன. மேற்படி பணம் குறித்து கேட்ட போது பாராமவுண்ட் மாநகராட்சி ஒப்பந்தகாரர் தீபாவளி அன்பளிப்பாக ரூ.10,000/மும், எஸ்.ஆர்.எம். என்ற நிறுவன ஒப்பந்தகாரர் திரு.மார்த்தாண்டன் என்பவர் தீபாவளி அன்பளிப்பாக ரூ.15,000/- சற்று முன்பு கொடுத்ததாகவும் கூறினார். மேற்படி பணத்தில் ரூ.1,000/-ஐ மாநகராட்சி டிரைவர் திரு.ராஜாராம் என்பவரிடம் ஏற்கனவே வாங்கிய கடன் தொகைக்காக திரும்பக் கொடுத்துவிட்டு மீதி பணம் ரூ.14,000/-ஐ வைத்திருந்ததாகவும் சொல்லி ஆஜர்படுத்தினார். திரு.மனோகரன் மாநகராட்சி ஒப்பந்தகாரர்களிடம் அன்பளிப்பாகப் பெற்ற மேற்படி மொத்தப் பணம் ரூ.29,000/- லஞ்சப் பணம் எனக் கருதப்பட்டு என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி

திரு.மனோகரின் அருகிலிருந்த அதே இரும்பு அலமாரியில் லட்சுமி, பிள்ளையார், சரஸ்வதி உருவங்கள் அச்சிடப்பட்ட வெள்ளி காசுகள் 2, மகாலட்சுமி கடவுள் உருவம் அச்சிடப்பட்ட வெள்ளி காசுகள் 4, விநாயகர் கடவுளின் உருவம் அச்சிடப்பட்ட வெள்ளிக் காசுகள் 5, சிறிய வெள்ளி டம்ளர்கள் 2, அவற்றுக்குரிய வெள்ளி மூடிகள் 2 ஆக மொத்தம் 15 வெள்ளிப் பொருட்களை எடுத்து திரு.மனோகரன் ஆஜர் செய்தார். அவை குறித்து திரு.மனோகரனிடம் விளக்கம் கேட்ட போது அவரால் சரியான விளக்கம் அளிக்க இயலவில்லை. எனவே, மேற்படி வெள்ளிப் பொருட்களும் தீபாவளி இனாமாக பிற ஒப்பந்தகாரர்களிமிருந்து திரு.மனோகரானால் பெற்றதாகக் கருதி அவையும் கைப்பற்றப்பட்டது. மேலும், கணிணி அறையில் தனது இருக்கையில் அமர்ந்து அலுவல் கவனித்துக் கொண்டிருந்த திரு.சந்திரமோகன் அமர்ந்திருந்த இருக்கையின் எதிரில் இருந்த மேசை மற்றும் கோப்புகள் சோதனையிடப்பட்டது. தொடர்ந்து, திரு.சந்திரமோகன் தனது பர்சில் வைத்திருந்த பணம் ரூ.11,965/- குறித்து கேட்ட போது, அதில் ரூ.1,965/- தனது சொந்தப் பணம் எனவும், மீதியுள்ள ரூ.10,000/- மாநகராட்சி ஒப்பந்தகாரர் திரு.முருகேசன் என்பவர் தீபாவளிப் பண்டிகை இனாமாக இன்று 02.11.2018-ம் தேதி மாலை சுமார் 5 மணியளவில் கொடுத்த அன்பளிப்பு பணம் என்றும் கூறினார். மேலும், தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்த பிரவுன் நிற கவரில் ரூ.5,000/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அந்தப் பணம் குறித்து கேட்ட போது, மேற்படி பணமானது பாராமவுண்ட் நிறுவன ஒப்பந்தகாரர் திரு.சங்கர் என்பவர் இன்று 02.11.2018 மாலை சுமார் 6.30 மணியளவில் தீபாவளி அன்பளிப்பாக தனக்கு கொடுத்ததாகக் கூறினார். மேற்படி பணத்தில், திரு.சந்திரமோகனின் சொந்தப்பணமான ரூ.1,965/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மீதிப் பணமான ரூ.15,000/- ஒப்பந்தகாரரிடம் பெறப்பட்ட லஞ்சப் பணம் எனக் கருதப்பட்டு அந்தப் பணம் கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனையின் போது, (1) நகரப்பொறியாளர் அறையிலிருந்து கைப்பற்றப்பட்ட ரூ.1,34,500/- வைக்கப்பட்டு இருந்த வெள்ளை நிற சிறிய சணல் பை, (2) பணம் ரூ.73,000/- இருந்த 2018 ஜனவரி மாதத்திற்கான காலண்டர் காகித கவர், (3) மனோகரன் எடுத்து ஆஜர்படுத்திய ரூ.5,000/- இருந்த வெள்ளை நிறக்கவரில் CE (PA) என ஊதா மையினால் எழுதப்பட்ட கவர் - ஒன்று, (4) சந்திரமோகன் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.5,000/-த்தை எடுத்து ஆஜர்படுத்திய பிரவுன் கலர் கவர் - ஒன்று, (5) மதுரை மாநகராட்சி நகரப்பொறியாளர் பிரிவு வருகை பதிவேடுகள் 2018 -

இரண்டு ஆகியன கைப்பற்றப்பட்டது. மேலும், கைப்பற்றப்பட்ட வெள்ளை நிற சிறிய சணல்பை, 2018 ஜனவரி மாதத்திற்கான காலண்டர் காகித கவர் மற்றும் மதுரை மாநகராட்சி நகரப்பொறியாளர் பிரிவு வருகை பதிவேடுகள் 2018 - இரண்டு ஆகியவற்றில் நானும், ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர்கள் திரு.கண்ணன், திரு. குமரகுரு மற்றும் திரு. அரசு ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம். மனோகரன் ஆஜர்படுத்திய வெள்ளை நிற கவரில் நானும், மனோகரனும் கையொப்பம் செய்தோம். சந்திரமோகன் ஆஜர்படுத்திய பிரவுன் கலர் கவரில் நானும், சந்திரமோகனும் கையொப்பம் செய்தோம். திரு. S.அரசு, நகர் பொறியாளர் (பொறுப்பு), மதுரை மாநகராட்சி, மதுரை அவர்களிடமிருந்தும், அவரது அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் வசமிருந்து கீழ்கண்டவாறு பணம் மற்றும் வெள்ளிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. S.அரசு,<br>செயற் பொறியாளர், மண்டலம் - 1,<br>நகர் பொறியாளர் (பொறுப்பு),<br>மதுரை மாநகராட்சி, மதுரை. | ரூ. 2,07,500/- | வெள்ளி காசு - 1 |
| 2. | திரு.மனோகரன்,<br>உதவி செயற் பொறியாளர் /<br>நகர் பொறியாளரின் நேர்முக உதவியாளர்,<br>நகர் பொறியாளர் அலுவலகம்,<br>மதுரை மாநகராட்சி, மதுரை. | ரூ. 29,000/- | வெள்ளிகாசுகள் - 11<br>வெள்ளி டம்ளர் - 2<br>வெள்ளி மூடி - 2 |
| 3. | திரு.சந்திரமோகன், கணிணி உதவியாளர்,<br>நகர் பொறியாளர் அலுவலகம்,<br>மதுரை மாநகராட்சி, மதுரை. | ரூ. 15,000/- | -- |
| | **மொத்தம்** | **ரூ. 2,51,500/-** | |

மேற்படி திடீர் இணை ஆய்வு சம்மந்தமாக இன்று 19.35 மணி முதல் 23.00 மணி வரை திடீர் இணை ஆய்வு நடவடிக்கை குறிப்பு தயாரிக்கப்பட்டது. மேற்படி நடவடிக்கை குறிப்பு, கைப்பற்றப்பட்ட மொத்தப்பணம் ரூ.2,51,500/-, வெள்ளிக் காசுகள் - 12, வெள்ளி டம்ளர் -2, வெள்ளி மூடி - 2, வெள்ளை நிற சிறிய சணல் பை, 2018 ஜனவரி மாதத்திற்கான காலண்டர் காகித கவர், மனோகரன் எடுத்து ஆஜர்படுத்திய ரூ.5,000/- இருந்த வெள்ளை நிறக்கவரில் CE (PA) என ஊதா மையினால் எழுதப்பட்ட கவர் - ஒன்று, சந்திரமோகன் தனது பேன்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.5,000/-த்தை எடுத்து ஆஜர்படுத்திய பிரவுன் கலர் கவர் - ஒன்று, மதுரை மாநகராட்சி நகரப்பொறியாளர் பிரிவு வருகை பதிவேடுகள் 2018 -

இரண்டு மற்றும் அலுவலர்கள் அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். Sd/- XXXX (S. சரவணன்) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மதுரை மாவட்டம், மதுரை. இணைப்பு : மேற்கண்டவாறு.

Sir, Received the Petition along with documents and seized articles on 02.11.2018 at 23.45 hrs. Copy of the Joint Surprise Check Proceedings Dated 02.11.2018 has been sent to the Directorate of Vigilance and Anti Corruption, Chennai to get prior permission to register a Regular Case. Sd/-XXXX A. Kannan, Inspr./V&AC, Madurai.

Sir, After obtaining the permission from the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Chennai vide Govt. Letter (D) No. 141, Municipal Administration and Water Supply Department, Dated : 26.03.2021, I have registered a case in Madurai V&AC Cr. No. 07/2021 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 & 102 Cr.P.C. on 30.04.2021 at 13.30 hrs. Sd/-XXXX A. Kannan, Inspr./V&AC, Madurai.

The Original FIR along with petition given by the Inspection Cell Officer Tr. S. Saravanan, Joint Surprise Check Proceedings Dated 02.11.2018, Eight Statement of Witnesses, Cash Rs.2,51,500/-, silver articles and documents are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Prevention of Corruption Act Cases, Madurai and other copies were send to the officers concerned.

A. Kannan
INSPR/V&AC
Madurai
30/4/2021
(A. KANNAN)
Inspector of Police
V&AC, Madurai.